சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 14/2016

பெயர் திரு. முத்தியாலு நாள். 14.10.2025
த/பெ. தருமன்

**பிரதிவாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. உயில் எழுதப்போகும் விவரத்தை என்னிடம் முருகேசன் கூறினார். அவ்வாறு எந்த தேதி என்னை அழைத்தார் என்றால் 03.10.2005 அன்று மதியம் 2.00 மணி அளவில் அழைத்தார். அந்த தகவலை முருகேசன் என்னிடம் எவ்வாறு பரிமாற்றம் செய்தார் என்றால் மாத்தூரில் உள்ள அவரது உறவினர் மூலம் என்னிடம் தெரிவித்தார். உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ராமபுரத்தில் வைத்து எழுதப்பட்டது. உயில் எழுதும்பொழுது முருகேசனைத் தவிர வேறு யார் இருந்தனர் என்றால் நானும, ரங்கசாமியும் இருந்தோம். உயில் எழுதும்பொழுது நான் பார்த்தேன். உயில் எழுதிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. உயில் பச்சைத்தாளில் எழுதப்பட்டது. உயிலின் வாசகங்களை யார் சொல்லியது என்றால முருகேசன் தான் சொன்னார். உயிலில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டது என்றால் நாட்கள் கடந்து விட்டதால் ஞாபகம் இல்லை. உயில் எழுதும் பொழுது முருகேசனுக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 70 வயது இருக்கும். தன்னுடைய மகன் ராதாகிருஷ்ணனுக்கு உயில் எழுதப்போவதாக என்னிடம் கூறினார். அதில் என்னென்ன சொத்துக்கள் உள்ளன என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. உயிலை எழுதிய நபர் தான் எழுதியதாக உயிலில் கையொப்பம் செய்தாரா என்றால் செய்தார். முதலில் உயிலில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் முருகேசன் செய்தார். அதன்பிறகு நான் அதில் கையொப்பம் செய்தேன். எனக்கு பிறகு ரங்கசாமி அதில் கையொப்பம் செய்தார்.

2) என் சித்தப்பா மகளை 1ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். எனவே 1ம் பிரதிவாதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். முருகேசன் கையொப்பத்தை உயில் எழுதுவதற்கு முன்பு மிஷினரி வாங்கும்பொழுது நான் பார்த்துள்ளேன். ஆவணங்களில் நான் அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. அவர் தன் கையொப்பத்தை முருகேச கவுண்டர் என்று தான் போடுவார். உயில் எழுதிய பிறகு உயில் வாசகங்களை படித்துக் காண்பிக்கவில்லை. அதில் உள்ள சொத்து விவரங்களை என்னிடம் படித்துக் காண்பிக்கவில்லை. அதனால் உயில் என்னென்னன சொததுக்கள் குறிப்பிடப்பட்டள்ள என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலில் வாசகங்கள் எனக்கு தெரியுமா, தெரியாதா என்றால் ஞாபகம் இல்லை. உயிலில் தன்னுடைய தன்னை சவரட்சணை செய்யவேண்டும் என்ற வாசகம் கண்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை.

3) உயில் வாசகங்களில் தன் மகள் மற்றும் பேரக்குழந்தைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடன் கையொப்பம் செய்த ரங்கசாமி என்பவரை விசாரித்தால் உயில் எழுதும் பொழுது நான் இருந்தேனா என்பதும், அதில் நான் கையொப்பம் போட்டேனா இல்லையா என்பதும் தெரியவரும் என்றால் சரிதான். முருகேசனின் இறப்புச் சான்றிதழை நான் பார்த்ததில்லை. அதில் என்ன வயது குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. 1ம் பிதிவாதி பெயரில் உள்ள ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் கூறுவதுபோல் உயில் ஏதும் எழுதப்படவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) முருகேசன் இறந்தபிறகு 1ம் பிரதிவாதி உயிலை புனைந்து கொண்டார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் அதில் கையொப்பம்போட்டு பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் நான் உயில் எழுதும்பொழுது இருந்திருந்தால் அதில் கண்டுள்ள வாசகங்கள், சொத்து விவரங்கள் ஆகியவற்றை தெரிவித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள உயிலில் உள்ள கையொப்பம் முருகேசனின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

(மேற்கண்ட குறுக்கு விசாரணையை 2ம் பிரதிவாதி ஒப்புக் கொள்கிறார். )

மறுவிசாரணை – இல்லை.